## கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் சாரதி தரம் III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019

கிழக்கு மாகாண பொதுச்சேவையின் சாரதி III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை வரிசை அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சைக்காக கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி **2019.07.17** ஆகும். இப்பரீட்சை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித்திகதிக்கு பின்னரான விரைவில் கிழக்கு மாகாணத்தின் நான்கு நகரங்களில் செயலாளர், மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இனால் நடாத்தப்படும்

### 2. ஆட்சேர்ப்புக்கான சேவை நிபந்தனைகள்:

2.1. இப்பதவி நிரந்தரமானதாகும். தங்களுக்குரிய ஓய்வூதியத் திட்டம் தொடர்பாக அரசினால் எதிர்காலத்தில் வகுக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் கொள்கை ரீதியான தீர்மானங்களுக்கு தாங்கள் கீழ்ப்படிதல் வேண்டும். அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்ட விதிகளுக்கு அமைய சேவை நிபந்தனைகள் தீர்மானிக்கப்படும்.

2.2. இவ்வறிவித்தலுக்கமைய விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்காக கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் நடாத்தப்படும் எழுத்துமூல போட்டிப்பரீட்சையில் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் செயல்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு செயல்முறைப்பரீட்சையிலும் சித்தியடைந்த விண்ணப்பதாரிகள் எழுத்துமூல போட்டிப்பரீட்சை மற்றும் செயல்முறைப்பரீட்சைகளில் பெற்றுக்கொள்ளும் புள்ளிகளின் கூட்டுத்தொகையின் முன்னுரிமை வரிசையின் படி நிலவும் வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டு விண்ணப்பதாரிகளின் தகைமைகள் பரீட்சிக்கப்பட்டு வெற்றிடங்கள் நிலவுகின்ற அலுவலகங்களுக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும்.

2.3. இந்நியமனம் பெறுபவர்கள் கிழக்கு மாகாணத்தின் எப்பாகத்திலும் சேவையாற்றத் தயாராக இருத்தல் வேண்டும் என்பதோடு கிழக்கு மாகாணத்தில் 10 வருடங்கள் கட்டாயமாக சேவையாற்றுதல் வேண்டும்.

2.4. மேலே குறிப்பிடப்பட்ட பதவிக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்த கிழக்கு மாகாண சேவையில் ஏற்கனவே உள்ளவர்கள் விண்ணப்பிப்பதாயின் திணைக்களத்தலைவருடாக விண்ணப்பித்தல் வேண்டும். அவ்வாறு விண்ணப்பிக்கும் போது மேலே குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பதாரி தெரிவு செய்யப்படுமிடத்து அவரை குறித்த பதவிக்கு விடுவிக்க முடியும் என அத்திணைக்களத்தலைவர் உறுதிப்படுத்தல் வேண்டும் என்பதுடன், திணைக்களத்தலைவரினால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கப்படாத விண்ணப்பப்படிவங்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகள் இப்பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து, இது அவர்களது புது நியமனமாகக் கருதி நடவடிக்கை எடுக்கப்படும்.

### 03. சம்பள அளவுத்திட்டம் :

3.1. இந்தப் பதவிக்கு உரித்தான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2016.02.25 ஆந் திகதிய பொது நிருவாக சுற்றறிக்கை 03/2016 இற்கு அமைவாக இருக்கும் என்பதோடு இந்த நியமனத்திற்கான சம்பள முறைமை PL 3 – 2016 சம்பள வகுதியின் கீழ் மாதாந்தம் ரூபா.25,790 - 10x270 - 10x300 - 10x330 - 12x350 - 38,990/- ஆகும். 2016.02.25 ஆந் திகதிய 03/2016 ஆம் இலக்க பொது நிருவாகச் சுற்றறிக்கையின் உப அட்டவணை II இல் குறிப்பிட்டுள்ளவாறு சம்பளக் கொடுப்பனவு இடம்பெறும்.

### 04. பொதுவான தகைமைகள் :

4.1. இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
4.2. சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் உள ஆரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.
4.3. ஆகக் குறைந்தது 5 அடி உயரமாக இருத்தல் வேண்டும்.
4.4. பெருந்தெருக்கள் சட்டம் பற்றி நல்ல அறிவு கொண்டவராயிருத்தல் வேண்டும்.
4.5. விண்ணப்ப முடிவுத் திகதிக்கு உடன் முன்னரான ஆறு (06) வருடங்களில் ஆகக் குறைந்தது மூன்று (03) வருடமாவது தொடர்ச்சியாக கிழக்கு மாகாணத்தில் வசித்திருப்பதோடு அதற்குரிய ஆவணங்களை சமர்ப்பிக்க கூடியவராக இருத்தல் வேண்டும்.

**குறிப்பு** : விண்ணப்பதாரிகள் வதிவிடத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக அண்மித்த மூன்று (03) வருடங்களுக்கான தேருநர் இடாப்பின் உறுதிப்படுத்தப்பட்ட பிரித்தெடுப்பிதழ்களுடன் பிரதேச செயலாளரினால் மேலொப்பம் இடப்பட்ட கிராம உத்தியோகத்தர் சான்றிதழையும் நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டியது கட்டாயமானதாகும்.

**05. ஆட்சேர்ப்பு முறை :**

5.1. கிழக்கு மாகாணத்தில் அனுமதிக்கப்பட்ட சாரதி சேவையின் ஆட்சேர்ப்புத்திட்டம் மற்றும் அரச பொது நிர்வாக சுற்றறிக்கைகள் மற்றும் மேலே 2.2 இன் ஏற்பாடுகளுக்கு அமைவாக ஆட்சேர்ப்பு செய்யப்படும். அத்துடன் எழுத்துப்பரீட்சையின் அடிப்படையில் செயன்முறைப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதோடு எழுத்துப்பரீட்சை மற்றும் செயன்முறைப்பரீட்சை பெறுபேற்று அடிப்படையில் விண்ணப்பதாரிகள் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்படுவதுடன் இவ்வறிவித்தலில் கோரப்பட்ட தகைமைகள் யாவும் பரீசிலிக்கப்படும். தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து இப்பதவிக்கான உரிமைகள் இரத்துச் செய்யப்படும். நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் எவையும் வழங்கப்பட மாட்டாது.

5.2. அனைத்து விண்ணப்பதாரிகளும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னதாக பதவிக்கு ஏற்புடைய அனைத்து தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் அவசியமானதாகும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் கோரப்பட்டுள்ள தகைமைகளுக்குரிய பரீட்சைப் பெறுபேறுகள் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும். பெறுபேறுகளை எதிர்பார்த்துச் சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் தவறொன்றாக கருதப்படும் என்பதுடன் தகுதியற்றவர்களின் விண்ணப்பங்களும் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

5.3 நிலவுகின்ற வெற்றிடங்களின் அடிப்படையில் 80% திறந்த போட்டிப்பரீட்சை மூலம் நிரப்பப்படும்.

**06. பொய்யான தகவல்களுக்கான தண்டனை :**

விண்ணப்பப்பத்திரங்களை பூர்த்தி செய்யும் போது மிக கவனத்துடன் சரியான தகவல்களை அளித்தல் வேண்டும். இப்பரீட்சை விதிகளின் படி எவரேனும் விண்ணப்பதாரியொருவர் பரீட்சை முன்னரோ பரீட்சையின் போதோ அல்லது பரீட்சையின் பின்னரோ எச்சந்தர்ப்பத்திலாவது தகைமையற்றவர் என தெரியவருமாயின், அவரின் பரீட்சார்த்தியுரிமை இரத்துச் செய்யப்படலாம். விண்ணப்பதாரியொருவர் சமர்ப்பிக்கின்ற ஏதேனும் தகவல் பொய்யானதென தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் அல்லது சமர்ப்பிக்க வேண்டிய தகவலை வேண்டுமென்றே சமர்ப்பிக்கத் தவறும் பட்சத்திலும் அவர் மாகாண சேவையிலிருந்து நீக்கப்படலாம் அல்லது சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படலாம்.

**07. பரீட்சைக்கட்டணம் :**

பரீட்சைக்கட்டணம் ரூபா. 600/- ஆகும். இக்கட்டணத்தை விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள ஏதேனுமொரு பிரதேச செயலகத்தில் அல்லது செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் எனும் பெயருக்கு எழுதிய காசுக் கட்டளையொன்றின் மூலம் செலுத்த முடியும். மாற்றப்படும் அலுவலகம் திருகோணமலை என குறிப்பிடுதல் வேண்டும். பரீட்சைக்கட்டணத்தை செலுத்தி அதற்காக வழங்கப்படும் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியினை விண்ணப்பத்தில் உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டிவிட வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்படப்பிரதியொன்றினை எதிர்கால தேவைக்காக தன் வசம் வைத்துக்கொள்ளுதல் வேண்டும்.) எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணங்கள் மீள செலுத்தப்படாததுடன் இப்பரீட்சைக் கட்டணம் வேறு பரீட்சைகளுக்கு மாற்றுவதற்கும் இடமளிக்கப்படமாட்டாது.

**08. விண்ணப்பிக்கும் முறை :**

8.1. இவ்வறிவித்தலில் இறுதியில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய A4 (21cmx29cm) அளவிலான தாளின் இரு பக்கங்களையும் **மட்டும்** உபயோகித்து, **இல 1.0 தொடக்கம் 8.0 வரை முதலாம் பக்கத்திலும், இல. 9.0 தொடக்கம் 13.0 வரை தாளின் இரண்டாம் பக்கத்திலும்** உள்ளடங்குமாறு விண்ணப்பங்களைத் தயாரித்துக் கொள்ளுதல் வேண்டும்.

8.2 **உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்துக்கு அமையாதவையும், பிழையின்றி பூரணப்படுத்தப்படாதவையும், மாதிரி விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் பரீட்சைக் குறியீட்டு இலக்கமின்றியும், உரிய திகதிக்கு முன்னர் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாதவையும், பரீட்சைக் கட்டணத்திற்கான பற்றுச்சீட்டின் மூலப்பிரதி ஒட்டப்படாதவையும் உரிய விண்ணப்ப முடிவுத்திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படாதவையும், முழுமையுறாதவையுமான விண்ணப்பங்கள் எதுவித முன்னறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.** உரியவாறு விண்ணப்பங்கள் பூர்த்தி செய்யத்தவறுவதால் ஏற்படும் நட்டத்திற்கு விண்ணப்பதாரர்களே பொறுப்பாளிகளாவர். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதியை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். பூர்த்தி செய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் காட்டப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக உள்ளதென்பதற்கு விண்ணப்பதாரியே பொறுப்பாக இருத்தல் வேண்டும். அவ்வாறு இல்லாதவிடத்து விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8.3 இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமையுடையவர்கள் மாத்திரம் விண்ணப்பித்துள்ளனர் எனும் முன் அனுமானத்துடன் விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதித்திகதியோ அல்லது அதற்கு முன்னரோ உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரிய பற்றுச்சீட்டுடன், தவறின்றி பூரணப்படுத்திய விண்ணப்பப்படிவங்களை முன்வைத்த விண்ணப்பதாரிகளுக்கு மேற்படி பரீட்சைக்கு தோற்றுவதற்கு அனுமதி அட்டைகள் அனுப்பப்படும். பரீட்சைக்கு அனுமதி அட்டையை பெற்றுக்கொள்ளல் விண்ணப்பதாரி மேற்படி பதவிக்கான தகைமைகளைப் பெற்றுள்ளார் என ஏற்றுக்கொள்வதாக கருத முடியாது.

8.4 விண்ணப்பங்கள் அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் பரீட்சைக் குறியீட்டு இலக்கம் **EX/Rec/19/07/DRI/OP** என்பதை குறிப்பிடுவதோடு **"கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் சாரதி தரம் III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019"** என குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

8.5 இப்பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை சத்தியப்பிரமாண ஆணையாளர், பரீட்சார்த்தியின் பிரிவிற்குரிய கிராம உத்தியோகத்தர், சமாதான நீதவான், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, ரூபா. 292,080/- ஆண்டுச்சம்பளத்தை அல்லது அதற்குக்கூடிய தொகையை வருடாந்த திரட்டிய சம்பளமாக பெறும் அரச அல்லது மாகாண சேவைச்சேர்ந்த நிரந்த பதவிநிலை உத்தியோகத்தர், முப்படையைச் சேர்ந்த பதவி நிலையிலுள்ள அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பதவி வகிக்கும் அலுவலர், புத்த விகாரைக்குப் பொறுப்பாகவுள்ள பௌத்த விகாராதிபதி அல்லது தலைமை பிக்கு அல்லது வேறு மத பீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியோர்கள் ஆகியோர்களில் ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். **அரச / கிழக்கு மாகாண அரச சேவையிலுள்ள அலுவலரொருவர் விண்ணப்பிப்பதாயின்,** விண்ணப்பப்படிவத்திலுள்ள விண்ணப்பதாரியின் கையொப்பமானது, திணைக்களத்தின் பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் முன்னிலையில் இடப்பட்டு அதனை அப்பதவிநிலை உத்தியோகத்தர் / திணைக்களத்தலைவர் சான்றுப்படுத்தி திணைக்களத்தலைவரினால் உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படுதல் வேண்டும்.

8.6 முறையாக பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் **2019.07.17**ஆந் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடியவாறு பதிவுத் தபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்ப இறுதித்திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். நீங்கள் அஞ்சல் செய்த விண்ணப்பம் தொலைந்து போனாலோ அல்லது காணாமல் போனாலோ அதற்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பொறுப்பேற்கமாட்டாது. **(விண்ணப்பத்தை செயலாளரின் தனிப்பட்ட பெயருக்கு அனுப்புவதை தவிர்த்துக் கொள்ளுதல் வேண்டும்.)**

செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
198, உட்துறைமுக வீதி,
திருகோணமலை

**09. பரீட்சைக்கு தோற்றுதல்:**

9.1 பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்கு தோற்றுதல் வேண்டும்.

9.2 பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்தி இந்த விளம்பரத்தின் **8.5ஆம்** பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதற்கு அமைவாக அனுமதி அட்டையில் தனது கையொப்பம் உறுதிப்படுத்த வேண்டும். அவ்வாறு சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திகளுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.

9.3 பரீட்சையினை நடத்துதல் சம்பந்தமாக பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிதல் வேண்டும். அந்த விதிமுறைகள் மீறப்படுமிடத்து மாகாண பொதுச்சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்படும் தண்டனைக்கு பரீட்சார்த்தி உட்படுதல் வேண்டும்.

குறிப்பு : **பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சை அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்படுதல் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என கருதப்படலாகாது என்பதுடன், தேவையான தகைமைகள் பூரணப்படுத்தப்படாது அல்லது பொய்யான தகவல்களை வழங்கி பரீட்சைக்கு தோற்றுதல் தவறொன்றாக கருதப்படும்.**

**10.** பரீட்சார்த்திகளின் ஆளடையாளம் :

தான் தோற்றும் அனைத்துப் பாடங்கள் தொடர்பில் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர் திருப்திப்படும் வகையில் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சை மண்டபத்தில் தனது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். அதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் ஆவணங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அ) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை.

ஆ) செல்லுபடியாகும் கடவுச்சீட்டு (பாஸ்போட்).

இ) செல்லுபடியாகும் சாரதி அனுமதிப்பத்திரம்.

**11.** பரீட்சை நடாத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள பரீட்சை நகரங்களும் அவற்றின் எண்களும் பின்வருமாறு :

| நகரம் | நகர எண் | நகரம் | நகர எண் |
|---|---|---|---|
| திருகோணமலை | 01 | அம்பாறை | 03 |
| மட்டக்களப்பு | 02 | கல்முனை | 04 |

**கவனிக்க :** ஒரு பரீட்சை நகரம் சார்பாகக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களின் எண்ணிக்கை குறையுமிடத்து இப்பரீட்சை அண்மையிலுள்ள பரீட்சை நகரத்திற்கு மாற்றப்படலாம்.

**12. ஆட்சேர்ப்புக்கான தகைமைகளும், பரீட்சைப் பாடத்திட்டங்களும்**

i. **வயதெல்லை :**
விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியில் 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**(தற்போது கிழக்கு மாகாண அரச சேவையில் நிரந்தர பதவியில் உள்ளவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)**

ii. **கல்வித் தகைமைகள் :**
க.பொ.த (சா/த) பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாத வகையில் சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி உள்ளடங்கலாக குறைந்தது 02 திறமைச்சித்தி உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

iii. **தொழில்சார் தகைமை :**
மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட "B" மற்றும் "C" தர பிரிவுகளையுடைய வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்றிருத்தல் வேண்டும். (பழைய வாகன அனுமதிப்பத்திரமாயின் "C, C1" மற்றும் "B" தர பிரிவுகளை பெற்றிருத்தல் வேண்டும்)

iv. **அனுபவம் :**
மோட்டார் வாகன அனுமதிப்பத்திரத்தை பெற்ற பின்பு மோட்டார் வாகன சாரதியாக குறைந்தது மூன்றாண்டுகள் அனுபவமுடையவராக இருத்தல் வேண்டும். (சான்றிதழ் மூலம் நிரூபிக்க வேண்டும்)

v. **உடல் தகுதி :**
இரவிலும் பகலிலும் கடமையாற்றக்கூடியதாக நல்ல உடல் ஆரோக்கியமுடையவராகவும், நல்ல கண்பார்வையுடையவராகவும் இருத்தல் வேண்டும். அத்துடன் இதனை அரச மருத்துவ உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டும்.

vi. **பரீட்சைத்திட்டம் :**

**(i) எழுத்துப்பரீட்சை :**
இப்பரீட்சை இரண்டு (02) வினாத்தாள்களைக் கொண்டிருப்பதோடு இப்பரீட்சை சிங்களம் மற்றும் தமிழ் ஆகிய மொழிகள் மூலம் நடாத்தப்படுவதுடன் விண்ணப்பிக்கும் மொழியை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

| வினாத்தாள் | மொத்தப் புள்ளிகள் | நேரம் | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| உளச்சார்பு | 100 | 01 மணித்தியாலம் | 40% |
| பொது அறிவு | 100 | 01 மணித்தியாலம் | 40% |

**உளச்சார்பு :** இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் தர்க்க சிந்தனை, பகுப்பாய்வு திறன், தீர்மானம் எடுக்கும் ஆற்றல் மற்றும் கணித திறன் என்பனவற்றை அளவிடும் வகையில் தயாரிக்கப்பட்ட வினாக்களைக் கொண்டிருக்கும்.

**பொது அறிவு :** இவ்வினாத்தாள் பரீட்சார்த்தியின் உள்நாட்டு, வெளிநாட்டு போக்குவரத்து முறைமை, வீதிச்சமிக்ஞைகள், போக்குவரத்து சட்டங்கள், உள்நாட்டு, வெளிநாட்டு போக்குவரத்து முறைகள் பற்றிய பொது அறிவு, மிகமுக்கியமான உள்நாட்டு மற்றும் தேசிய முறைகள், அரசியல், கலாச்சார, சமூக, விளையாட்டு சம்பந்தமாக சோதனையிடும் வினாக்களைக் கொண்டிருக்கும்.

**(ii) செயன்முறைப்பரீட்சை :**

வாகனம் செலுத்துதலும் நெடுஞ்சாலை சட்ட விதிகளும்

| பாடங்கள் | | அதிகபட்ச புள்ளிகள் | சித்தியடைவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| **வாகனம் செலுத்துதல் மற்றும் பெருந் தெருக்கள் குறியீடுகள்** | | | |
| (i) | வாகனம் செலுத்தும் திறன் | 50 | |
| (ii) | வீதி சமிக்ஞை மற்றும் பெருந்தெருக்கள் சமிக்ஞை பற்றிய அறிவு | 30 | **50** |
| (iii) | பயணிகள் பாதுகாப்பு | 10 | |
| (iv) | மோட்டார் பொறிமுறை தொடர்பான அடிப்படை அறவு | 10 | |
| **மொத்தம்** | | **100** | |

**குறிப்பு :**

1. இந்த ஆட்சேர்ப்பு பரீட்சையின் போது சித்தியடைந்துள்ளதாக கருதப்படுவதற்கு அனைத்து வினாப்பத்திரங்களிலும் தனித்தனியாக 40 புள்ளிகளை விட அதிகமான புள்ளிகளை பெறுதல் வேண்டும். எவ்வாறெனினும், மேலே குறிப்பிட்ட புள்ளியின் வரையறைக்கமைய தேவையாக உள்ள வெற்றிடங்களை நிரப்ப முடியாமல் போகும் சந்தர்ப்பத்தில் பிரதம செயலாளர், கிழக்கு மாகாணம் மற்றும் செயலாளர், மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் ஆகியோரின் உடன்பாட்டுடன் அப்புள்ளி அளவினை குறித்த மட்டமொன்றிற்குக் குறைப்பதற்கு கிழக்கு மாகாண கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அதிகாரமுண்டு.
2. மதகுருமார் மற்றும் பெண்கள் இப்பதவிக்கு விண்ணப்பிப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

**13.** நேர்முகப்பரீட்சைக்கு குறித்த தினத்தில் சமூகமளிக்கத் தவறும் விண்ணப்பதாரிகளுக்கு பிறிதொரு தினத்தில் நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிப்பதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

**14.** தனது தகைமைகளை சான்றுப்படுத்துகின்ற சகல ஆவணங்களையும் நேர்முகப்பரீட்சைக்குழுவிற்கு நேர்முகப்பரீட்சைக்கு சமூகமளிக்கும் தினத்திலேயே சமர்ப்பிக்க வேண்டும். நேர்முகப்பரீட்சையின் போது சமர்ப்பிக்காத ஆவணங்கள் தொடர்பில் பின்னர் எக்காரணம் கொண்டும் கவனம் செலுத்தப்படமாட்டாது.

**15.** இந்த அறிவித்தலில் ஏதாவது திருத்தங்கள் தேவையானவிடத்து அது தொடர்பில் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இனால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அத்துடன் ஏதாவது விசேட காரணத்தினால் பரீட்சை நடாத்த முடியாமல் போகுமிடத்து அது தொடர்பான இறுதி முடிவும் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இனால் எடுக்கப்படும் தீர்மானமே இறுதியானதாகும். அதேபோன்று இப்பதவிக்கான வெற்றிடங்கள் நிரப்பப்படும்போது, அவ்வெற்றிடத்தின் ஒரு பகுதியையோ அல்லது முழுமையாகவோ நிரப்புவது அல்லது நிரப்பாமல் விடுவது தொடர்பிலும் இறுதி முடிவு கௌரவ ஆளுநர் / பொதுச் சேவை ஆணைக்குழு, கிழக்கு மாகாணம் இன் ஆலோசனையின் படி நியமன அதிகாரியினால் மேற்கொள்ளப்படும்.

**எம்.வை. சலீம்**,
செயலாளர்,
மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு,
கிழக்கு மாகாணம்,
திருகோணமலை.

**EX/Rec/19/07/DRI/OP**

மாதிரி விண்ணப்பப்படிவம் (அலுவலக உபயோகத்திற்கு)

## கிழக்கு மாகாணப் பொதுச் சேவையின் சாரதி தரம் III பதவிக்கு மாகாண ரீதியான புள்ளிகளின் முன்னுரிமை அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை – 2019

***பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :***
தமிழ் - **T**, சிங்களம் - **S**
(உரிய எழுத்தை கூட்டினுள் இடவும்)

***பரீட்சைக்கு தோற்றும் நகர எண் :***
(11 வது பந்தியில் குறிப்பிடப்பட்ட பரீட்சை நகர இலக்கத்தைக் குறிப்பிடுக.)

**நிரந்தர வதிவிட மாவட்டம் :** ……………………………………………………………………………………

1.0. 1.1 முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு முதலெழுத்துக்களுடன் பெயர்: Mr.. ……………………………
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) (உதா : MR.PERERA, A.B.C) ………………………………………..

1.2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்) : ………………………......……..

1.3. முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) : ……………………………………………………………………...

1.4. தொலைபேசி இல. : ……………………………………………………………………......................

2.0. 2.1. நிரந்தர முகவரி : ………………………………………………………………………........................
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

2.2. நிரந்தர முகவரி : ………………………..…………………………………………………………....
(சிங்களத்தில்/தமிழில்)

2.3. அனுமதி அட்டை அனுப்ப வேண்டிய முகவரி : ………………………………………………………..
(ஆங்கில கெப்பிற்றல் எழுத்தில்)

3.0. 3.1. நீங்கள் இலங்கை பிரஜையாயின், தேசிய அடையாள அட்டை இல.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

3.2. பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3. 2019.07.17 ஆந் திகதியில் வயது,

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4.0. கல்வித்தகைமைகள் :
க.பொ.த (சா/த) பரீட்சை பற்றிய விபரம் :
I. பரீட்சையின் வருடம் :……………………
II. பரீட்சை சுட்டிலக்கம் :……………………
III. பெறுபேறு :

| பாடம் | பெறுபேறு | பாடம் | பெறுபேறு |
|---|---|---|---|
| 1. | | 6. | |
| 2. | | 7. | |
| 3. | | 8. | |
| 4. | | 9. | |
| 5. | | 10. | |

5.0. சாரதி அனுமதிப்பத்திரம் பற்றிய விபரம் :
i. சாரதி அனுமதிப்பத்திரத்தின் இலக்கம் : ……………………………………………………………..
ii. வாகன வகுப்பு : …………………………………………………………………………………………
iii. சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கிய திகதி : ……………………………………………………………

6.0 உயரம் : ……………………………………………………………………………………………..............

7.0. அனுபவம் :
i. சாரதியாக கடமையாற்றிய அனுபவம் : ………………………………………………………………
ii. அனுபவமுள்ள காலப்பகுதி : …………………………………………………………………………

8.0. நீங்கள் இலங்கை நீதிமன்றம் ஒன்றில் எப்போதாவது குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா?
அவ்வாறெனின் விபரத்தைக் குறிப்பிடுக. ………………………………………………………………...
……………………………………………………………………………………………………………...

9.0. **கிழக்கு மாகாண பொதுச்சேவையை சேர்ந்தவராயின்,**

9.1.திணைக்களம்/ அலுவலகம் : ………………………………………………………………

9.2.தற்போதைய பதவி மற்றும் சேவை : ………………………………………………………………

9.3.தற்போதைய தரம் : ………………………………………………………………

9.4. இச்சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட திகதி : ………………………………………………………………

9.5. முதல் நியமனத் திகதி : ………………………………………………………………

10.0. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட (தெளிவான விபரங்களுடன்) பற்றுச்சீட்டினை உரிய கூட்டினுள் கழராதவாறு ஒட்டவும்.

| பற்றுச்சீட்டு மூலப்பிரதியினை கழராதவாறு இங்கு ஒட்டவும் |
|---|

11.0. **விண்ணப்பதாரரின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் எனது அறிவிற்கு எட்டிய வரையில் உண்மையானவை எனவும், சரியானவை எனவும் நான் இத்தால் வெளிப்படுத்துகின்றேன். இதில் ஏதேனுமொரு பகுதி பூர்த்தி செய்யப்படாததன் அல்லது எவையேனும் தகவல்கள் பிழையாகச் சேர்க்கப்பட்டுள்ளதன் விளைவாக ஏற்படக்கூடிய ஏதாவது இழப்பை நான் ஏற்றுக்கொள்வதற்கு உடன்படுகின்றேன். மேலும் இங்கு அனைத்து பகுதிகளையும் சரியாக பூர்த்தி செய்துள்ளேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்ட இக்கூற்று பொய்யானவை எனத் தெரியவந்தால் நியமனத்திற்கு முன்னரான தகைமை நீக்கத்திற்கும், நியமனத்திற்குப் பின்னர் தெரியவந்தால் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

(இ) மேலும் இப்பரீட்சை நடாத்துதல் தொடர்பாக மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு செயலாளரினால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைந்தொழுகுவேன் என்றும் வெளிப்படுத்துகின்றேன்.

(ஈ) இதில் தரப்பட்டுள்ள தகவல்கள் எதனையும் பின்னராக மாற்றம் செய்யமாட்டேன்.

……………………………………
விண்ணப்பதாரியின் கையொப்பம்

திகதி : ……………………

12.0. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** (இவ்வறிவித்தலின் 8.5 இன்படி)

இந்த விண்ணபத்தை சமர்ப்பிக்கும் திரு. ………………………………… என்பவர் எனக்குத் தனிப்பட்ட முறையில் தெரிந்தவர் என்றும், அவர் தனது கையொப்பத்தை எனது முன்னிலையில் ……………………………. ஆந் திகதியில் இட்டார் என்றும், உரிய பரீட்சைக் கட்டணத்தை செலுத்தியுள்ளார் என்றும் அப்பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளதென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரது கையொப்பம்.

திகதி :………………………

கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
உத்தியோகத்தரின் முழுப் பெயர் :…………………………….
பதவி :……………………………………………………….
முகவரி :…………………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

13.0 **திணைக்களத் தலைவரின் உறுதியுரை :** (அரச/மாகாண பொதுச்சேவையிலுள்ள விண்ணப்பதாரிகளுக்கானது)

இத்திணைக்களத்தில் நிரந்தர உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. ………………………………………… அவர்களின் விண்ணப்பத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கின்றேன். அவர் விண்ணபித்துள்ள பதவிக்கு தெரிவு செய்யப்படுமிடத்து அவரை அப்பதவிக்கு விடுவிக்க முடியும் என்பதையும் இங்கு அவரால் குறிப்பிடப்பட்ட விடயங்கள் யாவும் சரியானவை என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

……………………………………
திணைக்களத்தலைவரின் கையொப்பம்

திகதி :……………………………………………
முழுப் பெயர் :………………………………………….
பதவி :………………………………………………….
முகவரி :……………………………………………….
(பதவி முத்திரை மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)